19.03.2025

அசல் வழக்கு எண்: 165/2016

வா.சா.1 சாட்சி ஈஸ்வரி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்துக்கள் எந்த ஊரில் உள்ளது என்றால் செட்டிக்குளத்தில் உள்ளது. என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கில் கண்ட 1ம் பிரதிவாதி சீனியம்மாள் எனது அம்மா என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பாப்பம்மாள் எனது சகோதரி என்றால் சரிதான். தாவா சொத்துக்களை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது அம்மாதான் அனுபவம் செய்தார் என்றால் அனைவரும் சேர்ந்துதான் அனுபவம் செய்தோம். எனக்கு திருமணமாகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு திருமணமானதிலிருந்து நான் எனது கணவரின் வீட்டில்தான் இருக்கிறேன் என்றால் நானும், எனது அம்மாவும் ஒன்றாகத்தான் இருக்கிறோம். நானும் எனது அம்மாவும் ஒரே ஊர்தான். தாவா சொத்தை நான் அனுபவம் செய்வதற்கு எனது பெயரில் தனிப்பட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது அம்மா பெயரில்தான் ஆவணம் உள்ளது. பிரித்து கொடுத்தால்தான் எனக்கு வரும்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட ஆறுமுகநாயக்கர் என்பது யார் என்றால் எனது அப்பா ஆகும். மேற்படி ஆவணத்தில் கண்ட பாப்பம்மாள் என்பது யார் என்றால் எனது சகோதரி ஆகும். வா.சா.ஆ1 ஆவணத்தில் எனது பெயர் இல்லை என்றால் பெயர் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 ஆவணத்தில் எனது பெயர் இல்லை என்றால் நான் படிக்கவில்லை. அதனால் எனக்கு தெரியாது. மொத்தம் எத்தனை சொத்திற்கு வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 3 சொத்துக்களில் எத்தனை சொத்து காடு, எத்தனை சொத்து வீடு என்றால் 3 இலக்க சொத்துக்களும் காடு ஆகும். மேற்படி 3 இலக்க சொத்திற்கும் நான்குமால் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 3 ஆவணத்தில் கட்டுப்பட்ட சொத்தில் எனது தாயார் இறக்கும் வரை குடியிருந்தார் என்றால் சரியல்ல. தனியாக குடியிருந்தார். வா.சா.ஆ.3 ஆவணத்தில் கண்ட சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி வீட்டை கட்டி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு திருமணம் ஆனபிறகு அனைவரும் சேர்ந்து கட்டினோம். மேற்படி வீடு ஓட்டுவீடா அல்லது காரவீடா என்றால் கார வீடு கொஞ்சம், ஓட்டுவீடு கொஞ்சம் ஆகும். மேற்படி வீட்டில் எனது அம்மாவுடன் நான் எத்தனை ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்றால் எனக்கு திருமணம் ஆனதிலிருந்து குடியிருந்து வருகிறேன். வா.சா.ஆ. 3 ஆவணத்தில் கட்டுப்பட்ட இடத்தில் வீடு உள்ளது என்பதையும் அதில் நாங்கள் குடியிருந்து வருகிறோம் என்பதையும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். மேற்படி வீட்டிற்கு மின் கட்டணம் வீட்டு வரி செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். எனது பெயரில் ரசீது போட்டுள்ளேனா என்றால் ஆமாம். மேற்படி ரசீதுகளை இதுவரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3வது இலக்க சொத்தில் உள்ள வீட்டையும் பிரித்துக்கொடுக்க சொல்லி கேட்டுள்ளேன் என்றால் எனது அம்மா பெயரில் உள்ள சொத்துக்களை

எனக்கும், எனது சகோதரிக்கும் சமமாக பிரித்துக்கொடுக்க கேட்டுள்ளேன். தாவா 3வது இலக்க சொத்து காலி இடம் என்று சொன்னால் அது தவறு என்றால் காலி இடமும் உள்ளது. வீடும் உள்ளது. தாவா 3 வது இலக்க சொத்தில் வீடு இருப்பதாக வழக்கில் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றாலும் சொல்லியுள்ளதாக தவறாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவம் செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு தனித்துப்பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல.

அழகர்சாமி மகன் அழகிரிநாயக்கர் எனது தாய்மாமா என்றால் சரிதான். மேற்படி அழகிரிநாயக்கர் என்பவர்தான் எனது அம்மாவிற்கு சீதனமாக தாவா சொத்துக்களை தான செட்டில்மெண்டு மூலம் எழுதிகொடுத்தார் என்றால் எனது மாமா எனது அம்மாவிற்கும் அப்பாவிற்கும் எழுதிகொடுத்தார். எனது மாமா எழுதிகொடுத்த விபரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மலைராஜன் என்பவர் எனது அம்மா மீது ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது அம்மா வழக்கு நடத்தி அந்த வழக்கு எனது அம்மாவிற்கு சாதகமாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த வழக்கில் உள்ள சொத்து வேறு சொத்தாகும். அந்த வழக்கில் உள்ள சொத்துக்கள் எவ்வளவு நிலங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கை நடத்துவதற்கு எனது சகோதரியின் குடும்பத்தார்தான் உதவி செய்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள்தான் உதவி செய்தோம். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாகவே மேற்படி வழக்கு நடந்த விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனது கணவர்தான் செலவு செய்தார். அந்த வழக்கை நடத்துவதற்கு நிறைய செலவானது என்றால் சரிதான். அந்த

வழக்கில் செலவு செய்தது சம்பந்தமாகத்தான் எனது அம்மாவிற்கும், எனது கணவருக்கும் கருத்துவேறுபாடு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த கருத்துவேறுபாடை மனத்தில் வைத்துக்கொண்டுதான் இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட விபரம் எனது கணவருக்கு தெரியும் என்றால் சரிதான். அவரை விசாரிப்பதற்கு தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரம் தவறானது என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. சரியான சொத்து விபரங்களை பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் மேலும் சில குடும்ப சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றாலும் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல. எனது தாயார் உயிருடன் இருக்கும்வரை நான் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற முத்திரை கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பாகபிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்று என்றால் சரியல்ல. எனது கணவர் எனக்கு கிடைக்கவேண்டிய பாகத்திற்கு மேல் 1ம் பிரதிவாதியிடம் தொகை பெற்றுக்கொண்டதால் நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

மலைராஜன் தாக்கல் செய்த வழக்கின் எண் தெரியுமா என்றால் நான் படிக்கவில்லை. அதனால் தெரியாது.